# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:144 ★24.09.2026 ★தமிழ் நாளிதழ் ★வியாழக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:144 ★24.09.2026 ★TamilDaily ★Thursday ★Page-4 ★Price-₹5/- Chennai


# தாராபுரத்தில் முதல்வர் விஜய் பிரச்சாரம்: செப்.30ல் பொதுக்கூட்டம்; அக்.4ல் ரோடு ஷோ



தாராபுரம் தொகுதியில் போட்டியிடும் தவெக வேட்பாளர் சத்தியபாமாவை ஆதரித்து முதல்வர் விஜய் 2 நாட்கள் பிரச்சாரம் செய்கிறார்.

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் (தனி) சட்டப்பேர வைத் தொகுதிக்கான இடைத் தேர்தல் வரும் அக். 6 ம் தேதி நடக்கிறது. திமுக, அதிமுக, தவெக, நாதக, இந்திய கம்யூனிஸ்ட் உள்பட 22 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

பிரதான கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து கட்சி தலைவர்கள் பிரச்சாரம் செய்யும் தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, திமுக தலைவர் ஸ்டாலின், நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் பிரச்சாரம் மேற்கொள்கின்றனர்.




# கிருஷ்ணகிரியில் 320 பேருக்கு டெங்கு, 85 பேருக்கு உண்ணி காய்ச்சல் பாதிப்பு: ஆட்சியர் தகவல்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடப்பாண்டில் மட்டும் இதுவரை 320 பேர் டெங்கு, 139 பேருக்கு எலி காய்ச்சல் மற்றும் 85 பேர் உண்ணி காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் ச.தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக டெங்கு, உள்ளிட்ட காய்ச்சல் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் ஆட்சியர் ச. தினேஷ் குமார் தலைமையில் நடந்தது.

இக்கூட்டத்தில் பேசிய ஆட்சியர் தினேஷ், "கிருஷ்ணகிரியில் டெங்கு, எலிக் காய்ச்சல் (லெப்டோஸ் பைரோசிஸ்), உண்ணி காய்ச்சல் உள்ளிட்ட கொசு மற்றும் எலி மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த 2 வார கால மாபெரும் தூய்மைப் பணி பிரச்சாரம் தொடங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் நடப்பாண்டு மட்டும் இதுவரை 320 நபர்களுக்கு டெங்கு காய்ச்சல், 139 நபர்களுக்கு எலிக்காய்ச்சல் மற்றும் லெப்டோஸ் பைரோசிஸ், 85 நபர்களுக்கு உண்ணி காய்ச்சலால் பாதிக்கபட்டுள்ளார்கள்.

மேலும், எலி மற்றும் கொசு மூலம் பரவும் நோய்களின் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு, இவற்றை உடனடியாகக் கட்டுப்படுத்தும் நோக்கில் கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகம் மாவட்டம் முழுவதும் 2 வார கால தீவிர தூய்மைப் பணி பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளது. தேங்கி நிற்கும் மழைநீர், அடர்ந்த புதர்கள், கழிவுகள் மற்றும் பராமரிக்கப்படாத சுற்றுப்புறச் சூழல் ஆகியவை கொசு இனப்பெருக்கத்திற்கும் எலி மூலம் பரவும் நோய்களின் வளர்ச்சிக்கும் முக்கிய காரணமாக அமைகிறது.

இதனை தடுக்கும் விதமாக, மழைக்காலம் தொடங்குவதற்கு முன்னதாகவே, மாவட்டம் முழுவதும் உள்ள அரசு கட்டிடங்கள், பள்ளிகள், கல்லூரிகள், அங்கன்வாடி மையங்கள், விடுதிகள் மற்றும் தொழிற்சாலைகள் என 7,094 பொது இடங்களில் கட்டமைப்பு ரீதியான, ஒவ்வொரு கட்டிடத்திலும் தூய்மைப் பணி மேற்கொள்ளப்படும்.இந்தபிரச்சாரத்தின் முக்கிய பணிகளாக, கூரை அல்லது மொட்டை மாடி தூய்மைப்படுத்துதல், குப்பைகள், தேங்கிய நீர் அகற்றுதல், மேல் தொட்டிகள் சுத்தம் செய்து குளோரினேற்றம் செய்தல், குடிநீர் பாதுகாப்பு உறுதி, புதர்கள் மற்றும் கொசு மற்றும் எலி வளைகளை அகற்றி மூடுதல் பணிகள் மேற்கொள்ளப்படும்.

ஒவ்வொரு கட்டிடத்திற்கும் உரிய பொறுப்பு அலுவலர், பொறுப்பாளர்கள் பொறுப்பேற்று, சுகாதாரத் துறை பணியாளர்களுடன் இணைந்து தூய்மைப் பணியை மேற்பார்வையிடுவார்கள். தனியார் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்கள் அவர்களின் வளாகங்களில் சொந்த குழுவைக் கொண்டு தூய்மைப் பணியை மேற்கொண்டு, புகைப்படச் சான்றுகளுடன் கூடிய அறிக்கையை மாவட்ட நிர்வாகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த 2 வார கால தீவிர தூய்மைப் பணி பிரச்சாரத்தின் மூலம் கொசு இனப்பெருக்க இடங்களை முற்றிலும் அகற்றி, பாதுகாப்பான குடிநீர் வழங்கி, மாவட்ட மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். அனைத்து தரப்பினரும் இந்த பிரச்சாரத்தில் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்வாறு ஆட்சியர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், ஒசூர் மாநகராட்சி ஆணையாளர் முகமது ஷபீர் ஆலம், மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர் உமாமகேஸ்வரி, மாவட்ட சுகாதார அலுவலர் ஜெகநாதன், மாநகர சுகாதார அலுவலர் அஜிதா, உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள்) வடிவேல், தமிழ்செல்வன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை கிழக்கு வட்டம், மாங்குளம் கிராமத்தில் மாவட்ட ஆட்சியரின் மக்கள் தொடர்பு முகாமில் 172 பயனாளிகளுக்கு ரூபாய்.41.43 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா இ.ஆ.ப., வழங்கினார்.

# பொதுவிநியோக திட்டம் குறித்த ஆய்வுக்கூட்டம்

## அமைச்சர்கள் பங்கேற்பு



உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் ப.வெங்கடரமணன், மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் வ.காந்திராஜ் ஆகியோர் தலைமையில் சென்னை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி கூட்ட அரங்கில் பொது விநியோக திட்டம் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

ஆய்வுக் கூட்டம்

இதுதொடர்பாக வெளியிடப்படுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ள தாவது:

சென்னை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி கூட்ட அரங்கில், பொதுவிநியோக திட்டம் குறித்த ஆய்வுக் கூட்டம், உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் ப.வெங்கடரமணன், மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் வ.காந்திராஜ் ஆகியோர் தலைமையில் 22.09.2026 அன்று பொது விநியோகத்திட்டம் குறித்த ஆய்வுக் கூட்டம் அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரிகூட்டரங்கில் நடைபெற்றது.

பொது விநியோகத் திட்டம்

இக்கூட்டத்தில் அனைத்து மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள், அனைத்து மாவட்ட துணைப்பதிவாளர்கள் (பொது விநியோகத் திட்டம்), குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் உயர் அலுவலர்கள் மற்றும் அனைத்து மாவட்ட கணினி மேலாளர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பொது விநியோகத் திட்ட செயல்பாடுகளான புதிய குடும்ப அட்டைகளுக்கான விண்ணப்பங்களுக்கு தீர்வு, புதிய நியாய விலைக் கடைகள் திறப்பு, நியாய விலைக் கடைகள் தணிக்கை மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கைப்பற்றுகை ஆகியவை குறித்து ஆய்வு செய்யப்பட்டன.

கைப்பேசி ஆய்வு செயலி

மேலும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் ப.வெங்கடரமணன் அவர்களால் சட்டப்பேரவையில், "துறைசார்ந்த அனைத்து அலுவலர்களும் நியாயவிலைக் கடைகள் மற்றும் கிடங்குகளை தணிக்கை செய்ய ஏதுவாக பொது விநியோகத் திட்ட கைப்பேசி ஆய்வு செயலி உருவாக்கப்படும்" என்ற அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக (22.09.2026) அன்று பொது விநியோகத்திட்ட கைப்பேசி ஆய்வு செயலி உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பெ.அமுதா, இ.ஆ.ப., உணவுப்பொருள்வழங்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் அஜய் யாதவ், இ.ஆ.ப. , கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் ஜி.லதா, இ.ஆ.ப., குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் காவல் துறை தலைவர் ரூபேஷ் குமார் மீனா இ.கா.ப., மற்றும் பொது விநியோகத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசு விடுதி மாணவர்களின் குறைகளை தீர்க்க கட்டுப்பாட்டு அறை

## அமைச்சர் வன்னி அரசு திறந்து வைத்தார்



சமூக நீதித்துறை சார்பாக ஆதிதிராவிட நல இயக்குநரகத்தின் கீழ் இயங்கும் அரசு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களின் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்ய 24x7 கட்டுப்பாட்டு அறையை சமூக நீதித்துறை அமைச்சர் வன்னி அரசு திறந்து வைத்தார்.

இதுதொடர்பாக வெளியிடப்படுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

சமூகநீதி விடுதிகளில் குறைதீர்வை வலுப்படுத்தி, குறைகளை நேரடியாகவும் உடனடியாகவும் நிவர்த்தி செய்வதற்காக ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறையை சமூக நீதித்துறை அமைச்சர் வன்னி அரசு இன்று ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் திறந்து வைத்தார்.

சமூக நீதித்துறையின் கீழ் செயல்படும் சமூக நீதி விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கர்கள் உணவு தொடர்பான புகார்கள் மற்றும் பிற குறைகளை பதிவு செய்து உடனடி தீர்வு பெற இது உதவும்.

## இராணிப்பேட்டை மாவட்டத்தில் MSME மற்றும் தொழில்முனைவோர்களுக்கான சுற்றுச்சூழலுக்கு உகந்த பேக்கேஜிங் மற்றும் ஏற்றுமதி நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

ராணிப்பேட்டை, செப்.24

இராணிப்பேட்டை மாவட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், சுற்றுச்சூழலுக்கு உகந்த பேக்கேஜிங் மற்றும் அதன் சமீபத்திய போக்குகள் குறித்த ஒரு நாள் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி 25.09.2026 அன்று இராணிப்பேட்டை, வானாபாடி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ அன்னை இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ், ரத்தன் நவல் ஹால் வளாகத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சி இராணிப்பேட்டை மாவட்ட தொழில் மையம் (DIC) சார்பில், இந்திய பேக்கேஜிங் நிறுவனம் (Indian Institute of Packaging IIP) சென்னை மையம். FaMe TN மற்றும் தொடர்புடைய அரசு நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் நடத்தப்படுகிறது.

இப்பயிற்சியில், நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பேக்கேஜிங் பொருட்கள் மற்றும் புதுமையான தொழில்நுட்பங்கள். சுற்றுச்சூழலுக்கு உகந்த பேக்கேஜிங்கிற்கான Branding & Marketing உத்திகள். ஐவுளி, கைவினைப் பொருட்கள் மற்றும் தோல் பொருட்களுக்கான பேக்கேஜிங் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களுக்கான பேக்கேஜிங் மற்றும் சமீபத்திய பேக்கேஜிங் போக்குகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து விளக்கங்கள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

மேலும், ஏற்றுமதிக்கான பேக்கேஜிங் தேவைகள், சர்வதேச சந்தைகளுக்கான பேக்கேஜிங் தரநிலைகள் மற்றும் ஏற்றுமதி பொருட்களுக்கு உரிய பேக்கேஜிங் முறைகள் குறித்து இந்திய பேக்கேஜிங் நிறுவனத்தின் (IIP) நிபுணர்களால் சிறப்பு விழிப்புணர்வு வழங்கப்படஉள்ளது. இதன்மூலம், இராணிப்பேட்டை மாவட்ட MSME நிறுவனங்கள் தங்களது தயாரிப்புகளை சர்வதேச சந்தைகளுக்கு ஏற்ற வகையில் உரிய முறையில் பேக்கேஜிங் செய்வது குறித்து நடைமுறை அறிவைப் பெற முடியும்.

மேலும், மாவட்டத்தில் உள்ள MSME நிறுவனங்கள் தங்களது தயாரிப்புகளை சர்வதேச சந்தைகளில் கொண்டு செல்லும் வகையில், Federation of Indian Export Organisations (FIEO) மூலம் MSME நிறுவனங்களுக்கான ஏற்றுமதி நடைமுறை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியும் நடத்தப்பட உள்ளது. இதில் ஏற்றுமதி தொடங்குவதற்கான நடைமுறைகள், தேவையான ஆவணங்கள். ஏற்றுமதி செயல்முறை மற்றும் சர்வதேச சந்தை வாய்ப்புகள் குறித்து தொழில் முனைவோருக்கு வழிகாட்டுதல்கள் வழங்கப்பட உள்ளன.

இராணிப்பேட்டை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் MSME நிறுவனங்கள், தொழில் முனைவோர், ஏற்றுமதியாளர்கள், புதிய தொழில் தொடங்க விரும்புவோர் மற்றும் தொழில் அமைப்புகளின் பிரதிநிதிகள் இந் நிகழ்ச்சியில் 25/09/2026 அன்று காலை 10.00 மணியளவில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், 100 இருக்கைகள் மட்டுமே உள்ளதால், முன் வருபவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலும்விவரங்களுக்கு. பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம். இராணிப்பேட்டை அலுவலகத்தை அணுகவும் என மாவட்ட ஆட்சியர் திருமதி. ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



திருநெல்வேலி மாவட்டத்தில் 18 மற்றும் 19ம் தேதிகளில் நடைபெற்ற தமிழக காவல்துறை அமைச்சு பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் கூடைப்பந்து பிரிவில் திண்டுக்கல் சாமிநாதபுரம் காவல் நிலைய தகவல் பதிவு உதவியாளர் காளி இமையவர்மன் அணி மூன்றாம் பரிசு வென்றனர். இந்நிலையில் இன்று திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் S.ஜெயக்குமார், அவர்கள் காளி இமையவர்மனை நேரில் அழைத்து அவர் பெற்ற சான்றிதழ், பதக்கம் மற்றும் நினைவு பரிசை வழங்கி பாராட்டினார்.

### செய்யாறு நகராட்சியில் நள்ளிரவு வரை அதிரடி சோதனை:

## கணக்கில் வராத ரூ.1.90 லட்சம் கூகுள் பே பரிமாற்றம் குறித்து லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை

செய்யாறு,செப்.24

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு திருவத்திபுரம் நகராட்சி அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் நடத்திய தீவிர சோதனை நள்ளிரவு வரை நீடித்ததால் நகராட்சி வளாகம் பரபரப்பாக காணப்பட்டது. சோதனையின் முடிவில், நகராட்சி கணக்கில் இடம் பெறாததாகக் கூறப்படும் ரூ.1.90 லட்சம் கூகுள் பே பணப் பரிமாற்றம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாக லஞ்ச ஒழிப்புத்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்யாறு திருவத்திபுரம் நகராட்சியில்திருவண்ணாமலைமாவட்டலஞ்ச ஒழிப்பு காவல் ஆய்வாளர் அருள்பிரசாத் தலைமையில் 8 பேர் கொண்ட குழுவினர் சோதனையில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் மதியம் 3 மணியளவில் தொடங்கிய சோதனை, இரவு நள்ளிரவு 12.45 மணி வரை சுமார் 10 மணி நேரத்துக்கும் மேலாக நடைபெற்றது.

சோதனைக்கு முன்னதாக நகராட்சி பணியாளர்களின் செல்போன்களை லஞ்ச ஒழிப்புத்துறையினர் தங்களது கட்டுப்பாட்டில் பெற்றுக்கொண்டதாக கூறப்படுகிறது. தொடர்ந்து நகராட்சி அலுவலக அறைகள், பணியாளர்கள் பயன்படுத்தும் வாகனங்கள் உள்ளிட்ட நகராட்சி வளாகத்தின் பல்வேறு பகுதிகளில் தீவிர சோதனை நடத்தப்பட்டது.

சோதனை நடைபெறும் நேரத்தில் நகராட்சி அலுவலகத்தின் பிரதான வாயில் மூடப்பட்டு, வெளிநபர்கள் உள்ளே செல்லாத வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதனால் நகராட்சி வளாகம் முழுவதும் பரபரப்பான சூழல் நிலவியது.

சுமார் 10 மணி நேரத்துக்கும் மேலாக நடைபெற்ற சோதனை நிறைவடைந்த நிலையில், நகராட்சி கணக்கில் இடம்பெறாததாகக் கூறப்படும் ரூ.1,90,000 தொகை கூகுள் பே மூலம் நகராட்சி ஆணையரின் உதவியாளர் பயன்படுத்திய செல்போனில் இருந்து பரிமாற்றம் செய்யப்பட்டிருப்பது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டதாக லஞ்சஒழிப்புத் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த பணப் பரிமாற்றம் தொடர்பான ஆவணங்கள் மற்றும் விவரங்கள் குறித்து தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது. சோதனை முடிவடைந்த பின்னர் லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

மதியம் தொடங்கிய சோதனை நள்ளிரவு வரை நீடித்ததால் செய்யாறு திருவத்திபுரம் நகராட்சி அலுவலக வளாகத்தில் பெரும் பரபரப்பு நிலவியது.







இராணிப்பேட்டையில் எல்.எப்.சி.பெண்கள் உயர்நிலை பள்ளியில் 22.09.26 செவ்வாய்க்கிழமை காமராஜர் காலை உணவு திட்டத்தின் விரிவாக்கத்தை இராணிப்பேட்டை நகரமன்ற தலைவர் சுஜாதா வினோத் தொடங்கி வைத்து, மாணவர்களுடன் அமர்ந்து சாப்பிட்டார். இதில் நகராட்சி ஆணையாளர் செந்தில்குமார்,பள்ளிதாளாளர்சார்லோட்வில்லிங்டன் ஆகியோர் கலந்து கொண்டு காலை உணவு சாப்பிட்டனர் மற்றும் நிகழ்ச்சியில் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

### செங்குன்றம் பேரூர் திமுக சார்பில்

## மதுராந்தகம் இடைத்தேர்தலில் தீவிர வாக்கு சேகரிப்பு

செங்குன்றம், செப்டம்பர் 24

திமுக கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் ஆணைக்கிணங்க, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின்படியும் சென்னை வடகிழக்கு மாவட்ட



செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் ஆலோசனைபடி செங்குன்றம் பேரூர் தி.மு.க சார்பில் மதுராந்தகம் இடைத்தேர்தலை முன்னிட்டு அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம் கீழாமூர் கிராமத்தில் திமுக வேட்பாளர் வழக்கறிஞர் ஐ.பரந்தாமனை உதயசூரியன் சின்னத்தில் ஆதரித்து செங்குன்றம் பேரூர் திமுக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆர்.டி. சுதாகர் தலைமையில் ஒன்றிய பிரதிநிதி பி.அன்பு, நிர்வாகிகள் மதிவாணன், எஸ்.கே. குணசேகரன், யுவராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று தீவிர வாக்கு சேகரித்தனர்.

## பழனி அருகே கரும்பு ஆலையில் தீ விபத்து; ரூ.2 லட்சம் மதிப்பிலான பொருட்கள் சேதம்



திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே வாடிப்பட்டி, வசந்த ராஜ் மில் அருகே உள்ள கரும்பு ஆலையில் திடீரென தீப்பிடித்து விபத்து ஏற்பட்டது. இதில் சுமார் ரூ.2 லட்சம் மதிப்பிலான பொருட்கள் தீயில் சேதமடைந்ததாக கூறப்படுகிறது.

தகவலறிந்து விரைந்து வந்த தீயணைப்புத்துறையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து பழனி தாலுகா காவல் நிலைய போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## திண்டுக்கல் அருகே கார் கவிழ்ந்து காவலர் பலி



திண்டுக்கல் நத்தம் ரோடு, RMTC காலனி அருகே திண்டுக்கல் மதுவிலக்கு காவல் நிலையத்தில் பணி புரியும் சாமிநாதன் என்பவர் காரில்நத்தம் நீதிமன்ற பணிக்கு சென்று விட்டு திரும்பி வரும்போது கார் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்து. இந்த விபத்தில் காவலர் சாமிநாதன் சம்பவ இடத்திலேயே பலியானார். சம்பவ இடத்தில் தாலுகா காவல் நிலைய போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்




திண்டுக்கல்மாவட்டம்கொடைக்கானல்பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த கோரியும்பாலாலாடுக்குவாகனநிறுத்தும்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கலையரங்கம் பகுதியில் உள்ள வியாபாரிகள் தங்கள் கடைகளே அடைத்து எதிர்ப்பு தெரிவிக்கும் விதத்தில் போராட்டம் நடத்தி வருகின்றனர் இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வியாபாரிகள் சங்கம் அதிகாரிகளுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்

## மானூர் ஊராட்சியில் "கிராம சபை விழிப்புணர்வு" நிகழ்ச்சி

பழனி, செப். 24

திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மானூர் ஊராட்சியில், சமூக விழிப்புணர்வு இயக்கம் சார்பில் கிராம ஊராட்சி மற்றும் கிராமசபைவிழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.



நிகழ்ச்சியில், கிராம ஊராட்சி நிர்வாகத்தின் செயல்பாடுகள், கிராம சபையின்முக்கியத்துவம், பொதுமக்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள், கிராம சபையில் பொதுமக்கள் பங்கேற்கும் முறை உள்ளிட்டவை குறித்து பொதுமக்களுக்கு விளக்கப்பட்டது.

## 75,000 பயிர்க்கடன் தள்ளுபடி... 180 நாட்களுக்குப் பிறகு வட்டி யார் செலுத்துவது?

### விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் அதிகாரிகளுடன் காரசார விவாதம்

செய்யாறு,செப்.24

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அருகே அனக்காவூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், அரசு அறிவித்துள்ள பயிர்க்கடன் தள்ளுபடிக்குப் பின்னர் 180 நாட்களுக்கு வட்டி கணக்கிடப்படுவது தொடர்பாக விவசாயிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே காரசாரமான விவாதம் நடைபெற்றது.

அனக்காவூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்றகூட்டத்துக்கு செய்யாறு சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின் தலைமை தாங்கினார். இதில் வேளாண்மை, வருவாய், தோட்டக்கலை, ஊரக வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள், வட்டாட்சியர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்யாறு, வந்தவாசி, வெம்பாக்கம், சேத்துப்பட்டு உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்று தங்களது கோரிக்கைகளை முன் வைத்தனர். வட்டிக்கு யார் பொறுப்பு? கூட்டத்தி ல் பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பாக விவசாயிகள் எழுப்பிய கேள்வி அதிகாரிகளிடையே பரபரப்பை ஏற்படுத்தியது. அரசு சார்பில் ₹75,000 வரை பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், 180



நாட்களுக்குப் பிறகு கணக்கிடப்படும் வட்டித் தொகையை யார் செலுத்துவது என விவசாயிகள் கேள்வி எழுப்பினர்.

தள்ளுபடி செய்யப்பட்ட கடனுக்கான வட்டியையும் சேர்த்து அரசு ஏற்குமா? அல்லது அந்த வட்டித்தொகையைகூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளிடமே வசூலிக்கப்படுமா? என விவசாயிகள் கேள்வி எழுப்பி, அதிகாரிகளிடம் விளக்கம் கோரினர்.

இதுதொடர்பாக கூட்டத்தில் நீண்ட நேரம் காரசாரமான விவாதம் நடைபெற்றது. பயிர்க்கடன் தள்ளுபடி குறித்து அரசு பலமுறை அறிவிப்புகளை வெளியிட்டுள்ள நிலையில், வட்டித் தொகை தொடர்பாகவும் அரசு தெளிவான கொள்கை முடிவை அறிவிக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர். இதற்கு பதிலளித்த அதிகாரிகள், 180 நாட்களுக்குப் பிறகு கணக்கிடப்படும் வட்டி தொடர்பாக அரசு கொள்கை முடிவு எடுத்து அறிவிக்கும் என தெரிவித்தனர்.

குறுவை தொகுப்பு அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க கோரிக்கை மேலும், குறுவை சாகுபடிக்கான தொகுப்பு திட்டத்தின் பயன்கள் அனைத்து தகுதியான விவசாயிகளுக்கும் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

விவசாயிகளின் கோரிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வழக்கு வேண்டாம்... சமரசமே தீர்வு! மாவட்ட நீதிபதி சுமதி சாய் பிரியா; ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்த சமரச விழிப்புணர்வு பேரணி

திருவண்ணாமலை செப். 24

திருவண்ணாமலை மாவட்டத்தில் நீதிமன்ற வழக்குகளை நீண்டகாலம் தொடராமல், இருதரப்பினரும் பேசி சுமூகமாக தீர்வு காணும் சமரச முறையை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் சமரச விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க், மாவட்ட முதன்மை நீதிபதியும், மாவட்ட சமரச மையத் தலைவருமான எம். சுமதி சாய்பிரியாமுன்னிலையில், மாவட்ட வன அலுவலகம் அருகில் பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு சமரசமையம், சென்னை உயர்நீதிமன்றத்தால் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. தனிநபர் தகராறு, பண வசூல் தகராறு, குடும்பத் தகராறு, சொத்து தகராறு, வாடகை தகராறு, காசோலை மோசடி, தொழிலாளர் நலன், உரிமையியல் உள்ளிட்ட பல்வேறு வழக்குகளை சமரசத்தின் மூலம் தீர்வு காண முடியும். வழக்குத் தரப்பினர்கள் தங்களது எதிர்தரப்பினருடன் பேசி பரஸ்பர உடன்பாட்டுடன் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், தகுதியான வழக்குகளை நீதிமன்றம் சமரச மையத்திற்கு அனுப்புகிறது. இங்கு பயிற்சி பெற்ற சமரசர்கள், இருதரப்பினரும் சுமூகமாக வழக்கை முடித்துக்கொள்ள வழிகாட்டுகின்றனர். சமரச மையத்தின் சேவையை பெற வழக்குத் தரப்பினர்கள் கூடுதல் கட்டணம் எதுவும் செலுத்த தேவையில்லை. தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான தனியறைகள், காத்திருப்பு வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளும் மையத்தில் உள்ளன. நீதிமன்றத்தின் அனைத்து வேலை நாட்களிலும் நாள் முழுவதும் சமரச மையம் செயல்படுகிறது. பேரணியில் ஆட்சியர் வந்தனா கார்க் மற்றும் மாவட்ட முதன்மை நீதிபதி எம். சுமதி சாய் பிரியா ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு சமரசம் தொடர்பான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வழங்கினர். சமரச மையத்தின் செயல்பாடுகள் மற்றும் அதன் மூலம்



வழக்குகளை சுமூகமாக முடித்துக்கொள்ளும் நடைமுறைகள் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மாவட்ட வன அலுவலகத்தில் தொடங்கிய பேரணி அறிவொளி பூங்கா வரை நடைபெற்றது. இதில் நீதிமன்ற அலுவலர்கள், ஊழியர்கள், வழக்கறிஞர்கள், விஷன் பாரா மெடிக்கல் கல்லூரி மாணவிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

மேலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அதிநவீன வீடியோ வாகனம் மூலம் சமரச மையத்தின் செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வு குறும்படங்கள் பொதுமக்களுக்கு திரையிடப்ப ட்டன. இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரம ணியன், கூடுதல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவனுபாண்டியன், திருவண்ணாமலை வட்டாட்சியர் மோகனராமன் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வழக்குகளுக்கு விரைவான தீர்வு காண சமரசமே சிறந்த வழி

## ஆரணியில் சமரச மைய விழிப்புணர்வு பேரணி

ஆரணி,செப்.24

உச்ச நீதிமன்றம், சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட சமரச மையத்தின் வழிகாட்டுதலின் படி, ஆரணி வட்ட சமரச மையம் சார்பில் சமரச மையத்தின் மூலம் வழக்குகளை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளும் வாய்ப்புகள் மற்றும் இதனால் பொதுமக்களுக்கு கிடைக்கும் பயன்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட விழிப்புணர்வு முகாமில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். அவர்களுடன்பள்ளியின்தலைமை ஆசிரியர் பி.தாமரைச்செல்வி மற்றும் ஆசிரியைகளும் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் அரசு வழக்கறிஞர்கள் எஸ். சியாம்சுந்தர், எஸ். பாலாஜி, எம்.சங்கரன், பார் அசோசியேஷன் துணைத்தலைவர் டி.திருஞானம், செயலாளர் சண்முகம், பொருளாளர் எஸ்.செந்தில், முன்னாள் தலைவர் எஸ்.ஸ்ரீதரன், டி.பார்த்திபன் உள்ளிட்ட மூத்த மற்றும் இளம் வழக்கறிஞர்கள், நீதிமன்ற ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



சமரச மையத்தின் மூலம் வழக்குகளை நீண்டகாலம் நிலுவையில் வைத்திருப்பதைத் தவிர்த்து, இருதரப்பினரின் ஒப்புதலுடன் சுமுகமான முறையில் தீர்வு காண முடியும் என்பதையும், இதனால் நேரம் மற்றும் செலவு மிச்சப்படுவதுடன், இருதரப்பினருக்கும் ஏற்ற தீர்வை எட்டுவதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது என்பதையும் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் எடுத்துரைக்கப்பட்டது.

நிகழ்ச்சியின் நிறைவாக ஆரணி வட்ட சமரச மைய இளநிலை உதவியாளர் கே.சௌந்தர் நன்றியுரை வழங்கினார்.

மையத்தின் செயல்பாடுகள் மற்றும் அதன் பயன்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சமரச மைய விழிப்புணர்வு பேரணி மற்றும் முகாம் நடைபெற்றது.

ஆரணிஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் இன்று காலை 9.15 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியை கூடுதல் மாவட்ட நீதிபதி சி. ஜெயஸ்ரீ கொடியசைத்து தொடங்கி வைத்தார். தொடர்ந்து தலைமையுரையாற்றிய அவர், வழக்குகளில் சமரச முறையின் முக்கியத்துவம், சமரச உரிமையியல் நீதிபதி டி.வி.கோப்பெருந்தேவி கலந்து கொண்டார். பார் அசோசியேஷன் தலைவர் வி.வெங்கடேசன், கே.லதா, சென்ட்ரல் நாசர் ஆகியோர் வரவேற்புரை வழங்கினர். மூத்த வழக்கறிஞர் கே.ராஜமூர்த்தி, சமரச தினத்தின் நோக்கம் மற்றும் சமரச மையத்தின் செயல்பாடுகள் குறித்து விழிப்புணர்வு உரையாற்றினார்.

ஆரணி அரசினர் பெண்கள் மாதிரி மேல்நிலைப் பள்ளியைச்சேர்ந்த மாணவிகள் சமரச மைய விழிப்புணர்வு பேரணி மற்றும்






## புதுஆயக்குடியில் தவெக வர்த்தக அணி சார்பில்,

# 100 நாள் சாதனை விளக்க பொதுக்கூட்டம்; மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல்

பழனி அருகே புதுஆயக்குடியில் திண்டுக்கல் மேற்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழக வர்த்தக அணி சார்பில், அரசின் 100 நாள் செயல்பாடுகள் மற்றும் சாதனைகளை விளக்கும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாவட்ட வர்த்தக அணி இணை அமைப்பாளர் (தக்வா) முகமது இஸ்மாயில் சேட், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் இக்பால்தீன், இணை அமைப்பாளர் மயூரா முருகன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். சிறப்பு விருந்தினராக மாவட்ட தவெக செயலாளர் கார்த்திக் ராஜா கலந்து கொண்டு மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் பழனி பாலன், நாகராஜ், சிவா, தொப்பம்பட்டி ராஜ்குமார், ஜின்னா, முத்துப்பாண்டி, மாரி, சரவணன் உள்ளிட்ட நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில்

# தேனி மாவட்டத்தைச் சேர்ந்த படித்த வேலைநாடுநர்கள் பயன்பெறும் பொருட்டு சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்



மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

தேனி மாவட்டத்தைச் சேர்ந்த படித்த வேலைநாடுநர்கள் பயன்பெறும் பொருட்டு சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம், தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் வரும் 25.09.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் நடைபெறவுள்ளது. இவ்வேலைவாய்ப்பு முகாமில் பல்வேறு தனியார்துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு, பல்வேறு காலிப்பணியிடங்களுக்கு 10ஆம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை, ஐடிஐ, பட்டயப்படிப்பு என பல்வேறு கல்வித்தகுதியில் உள்ள வேலைநாடுநர்களை தேர்வு செய்ய உள்ளனர். இவ்வேலைவாய்ப்பு முகாமில் வேலைநாடுநர்கள் கலந்து கொண்டு தனியார் துறைகளில்வேலைவாய்ப்பு பெறலாம். எனவே, வேலைநாடுநர்கள் தங்களது சுயவிபர நகல் மற்றும் கல்விச்சான்றிதழ்களின் நகல்களுடன் வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளலாம். மேலும்,5949905593 6என்றதொலைப்பேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டு தெரிந்துகொள்ளலாம் என் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



நீலநிற விளக்குகளால் ஜொலிக்கும் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.

சர்வதேச சைகை மொழிகள் தினத்தை முன்னிட்டு 23.09.26 புதன் கிழமை இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நீலநிற விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

## திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# ICU வார்டு கண்ணாடியை உடைத்த 2 பேர் கைது

திண்டுக்கல்,செப்.24

திண்டுக்கல் கன்னிவாடி தெத்துப்பட்டியை சேர்ந்த அஜித்குமார் கடந்த 20ம் தேதி வாகன விபத்தில் திண்





டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று சிகிச்சை பலனின்றி 21ம் தேதி உயிரிழந்தார். அஜித்குமாரின் இறப்பு செய்தியை கேட்ட உறவினர்களான தெத்துப்பட்டியை சேர்ந்த லோகேஷ்(24), ஸ்ரீகாந்த்(23) ஆகிய இருவரும் அவசர சிகிச்சை பிரிவு கண்ணாடியை உடைத்தனர். இது தொடர்பாக மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் நகர் வடக்கு காவல் நிலையத்தில் அளித்த புகார் அளித்தார்

இதுகுறித்து நகர் DSP.கார்த்திக் உத்தரவின் பேரில் நகர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் வசந்த்குமார் தலைமையிலான தீவிர விசாரணை மேற்கொண்டு லோகேஷ், ஸ்ரீகாந்த் ஆகிய 2 பேரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்

# வாலாஜாபேட்டையில் எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்கள் குறித்து விழிப்புணர்வு பேரணி

ராமிப்பேட்டை,செப்.24

இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டை அறிஞர் அண்ணா அரசினர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தின் முன்பு மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு பிரிவு சார்பில் எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்கள் குறித்த தீவிர விழிப்புணர்வு





பிரச்சார பேரணி நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு பேரணியை கல்லூரி முதல்வர் முனைவர்நசீம்ஜான் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பேரணியில் பங்கேற்ற மாணவிகள், எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்கள் குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கைகளில் ஏந்தியபடி, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கோஷங்களை எழுப்பினர். கல்லூரி வளாகத்தின் முன்பு தொடங்கிய பேரணி, வாலாஜாபேட்டை நகரின் முக்கிய சாலைகள் வழியாக சென்று, வாலாஜாபேட்டை பேருந்து நிலையத்தில் நிறைவடைந்தது. இந்த பேரணியில் கல்லூரி மாணவிகள் மற்றும் மாவட்ட எய்ட்ஸ்தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு பிரிவு அலுவலர்கள் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.




இராணிப்பேட்டைமாவட்டகாவல்அலுவலகத்தில் 23.09.2026 தேதி வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பே.சிபின், இ.கா.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இக்குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடம் மொத்தமாக 37 மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றுகாவல்கண்காணிப்பாளர்அவர்கள்தெரிவித்தார்.

## இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன் தலைமையில்

# டெங்கு தடுப்புப் பணிகளை தீவிரப்படுத்த பல்துறை ஒருங்கிணைப்புக் கூட்டம்

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இராணிப்பேட்டை மாவட்டத்தின் அனைத்து ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளிலும் டெங்கு தடுப்பு மற்றும் கொசு ஒழிப்பு பணிகளை ஒருங்கிணைந்துதுரிதமாக மேற்கொண்டு, மாவட்டத்தில் டெங்கு பரவலை கட்டுப்படுத்திட வேண்டும்.

மாவட்டத்திலுள்ள



மாவட்டத்தில் டெங்கு தடுப்புப் பணிகளை தீவிரப்படுத்த பல்துறை ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றது

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (23.9.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையின் சார்பில் இராணிப்பேட்டை மாவட்டத்தில் டெங்கு நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்தொடர்பானபல்துறை ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர்அவர்கள்தெரிவித்ததாவது : ணைந்து தீவிரப்படுத்தி, கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல், காலை மற்றும் மாலை நேரங்களில் கொசு ஒழிப்பு மருந்து தெளித்தல் மற்றும் தேவையானஇடங்களில்ஃபாகிங் இயந்திரங்களை முறையாகப் பயன்படுத்துதல் ஆகிய பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.

மேலும், குடிநீரின் தரத்தை உறுதி செய்ய தேவையான குளோரினேஷன் பணிகளை முறையாக மேற்கொள்ளவும், காய்ச்சல் பாதிப்பு உள்ள பகுதிகளில் மருத்துவ முகாம்கள் நடத்தி, நோயாளிகளை பரிசோதித்து உரிய சிகிச்சை வழங்க வேண்டும். டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை அனைத்து துறைகளும் அனைத்து மருந்தகங்களிலும் மருத்துவர் குறிப்பு இல்லாமல் Dolo 650 மாத்திரைகள் வழங்கக் கூடாது என சுற்றறிக்கை விடுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இக்கூட்டத்தில் இணை இயக்குனர் மருத்துவ பணிகள் மரு.சரவணகுமார். மாவட்ட சுகாதார அலுவலர் மரு.செந்தில்குமார், மாவட்ட தொற்று நோய் தடுப்பு வல்லுநர் மரு.விஜயகுமார். சுகாதாரத் துறை அலுவலர்கள், வட்டார மருத்துவ அலுவலர்கள், மருத்துவர்கள், சுகாதார மேற்பார்வையாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் நகராட்சி ஆணையாளர்கள் கலந்து கொண்டனர்.

# வில்லிவாக்கம் ஒன்றியம் பொத்தூர், வெள்ளானூர் ஊராட்சிகளில் 3 புதிய டிரான்ஸ்பார்மர்கள் துவக்க விழா

செங்குன்றம், செப்டம்பர் 24:

மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியத்திற்கு உட்பட்ட பொத்தூர் ஊராட்சி உப்பரப்பாளையம் அண்ணாமலை நகர், வெள்ளானூர் ஊராட்சி கொள்ளுமேடு ரெட்டை குளம், லட்சுமி நகர் ஆகிய பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக புதிதாக 3 மின்மாற்றிகள் (டிரான்ஸ்பார்மர்கள்) துவக்க விழா ஆவடி கோட்டம் மின் பகிர்மான செயற்பொறியாளர் கிறிஸ்டோபர் லியோ ராஜ் தலைமையில் நடைபெற்றது.





உதவி செயற்பொறியாளர் ராஜேஷ் சன், உதவி பொறியாளர் சதக்கத்துல்லாஹ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளருமான எம்.எல். விஜய் பிரபு சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 3 புதிய மின்மாற்றி டிரான்ஸ்பார்மர்களை துவக்கி வைத்து பொதுமக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தவெக ஒன்றியச் செயலாளர்கள் மணிவேல், வி.ஜெய்சங்கர், மணிமாறன், மேகநாதன், மைக்கேல் ராஜன், செல்வக்குமார், முகிலன், கொள்ளுமேடு தவெக நிர்வாகிகள் வி.லோகேஸ்வரன், சரண்குமார், ஆர். தீபக், கே.ஞானவேல், ஜி.ரேகா, எல்.கல்பனா, மணிகண்டன் உள்ளிட்ட மின்வாரிய ஊழியர்கள், பொதுமக்கள், குடியிருப்போர் நலச் சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள்திரளாககலந்துகொண்டனர்.

# வேடசந்தூர் அருகே காலி குடங்களுடன் பொதுமக்கள் சாலை மறியல்



திண்டுக்கல் மாவட்டம் எரியோடு அருகே புதுரோடு பகுதியில் கடந்த சில நாட்களாக தண்ணீர் வரவில்லை என்று கூறி பொதுமக்கள் காலி குடங்களுடன் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற எரியோடு காவல் நிலைய ஆய்வாளர் வினோதா தலைமையிலான போலீசார் மற்றும் வேடசந்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் கற்பகம் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்ததன் பேரில் சாலை மறியல் கைவிடப்பட்டது.

# டெங்கு உள்ளிட்ட தொற்றுநோய்களை தடுக்க செய்யாறில் தீவிர நடவடிக்கை

## சுகாதாரப் பணிகளை நேரில் ஆய்வு செய்த சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின்

செய்யாறு,செப்.24

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு பகுதியில் டெங்கு உள்ளிட்ட தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுவரும்முன்னெச்சரிக்கை மற்றும் சுகாதாரப் பணிகளை சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின் இன்று நேரில் ஆய்வு செய்தார்.

டெங்கு உள்ளிட்ட தொற்றுநோய்கள் பரவும் அபாயத்தை கருத்தில் கொண்டு, செய்யாறு வட்டத்திற்குட்பட்ட திருவத்திபுரம் நகராட்சியின்ராஜாஜி தெரு, காமராஜ்நகர்மற்றும் துளி ஊராட்சி உள்ளிட்ட பகுதிகளில் இன்று காலை சுமார் 8 மணியளவில் சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, பொதுமக்களின் குடியிருப்பு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள், புகை மருந்து தெளித்தல், கொசு ஒழிப்பு புகை தெளித்தல், குப்பைகள் சேகரிப்பு மற்றும் அவற்றை முறையாக அகற்றும் பணிகளை சார் ஆட்சியர் பார்வையிட்டார்.

குறிப்பாக, கொசுக்கள் உற்பத்தியாகும் வாய்ப்புள்ள இடங்களை கண்டறிந்து, அவற்றில் தேங்கியிருந்த தண்ணீரை உடனடியாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. உடைந்த வாளிகள்,

பயன்படுத்தப்படாத குளிர்சாதனப் பெட்டி உதிரிபாகங்கள், பழைய டயர்கள், தேங்காய் ஓடுகள் உள்ளிட்ட தேவையற்ற பொருட்களில் தேங்கியிருந்த தண்ணீர் அகற்றப்பட்டது



டன், சம்பந்தப்பட்ட பகுதிகளில் கொசு ஒழிப்பு புகை தெளிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ந்து, பொதுமக்களிடம் சார் ஆட்சியர்அம்பிகாஜெயின், வீடுகளிலும் வீடுகளைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். தேங்கிய தண்ணீர் கொசுக்கள் உற்பத்தியாகும் இடமாக மாறக்கூடும் என்பதால், தேவையற்ற பொருட்களை அகற்றி சுற்றுப்புறத்தைத் தூய்மையாகப் பராமரிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். மேலும், மக்கும் ஈரக்கழிவுகள் மற்றும் மக்காத உலர் கழிவுகளை பொதுமக்கள் தனித்தனியாகப் பிரித்து வழங்க வேண்டும் என்றும், தங்களது சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருப்பதுடன் நகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

தொற்றுநோய்களைத் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் ஒரு பகுதியாக அப்பகுதியில் சிறப்பு மருத்துவ முகாமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பொதுமக்களின்உடல்நலனைதொடர்ந்துகண்காணித்து, தேவையான மருத்துவ மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டது.

சுகாதார ஆய்வாளர் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து தொடர்ந்து கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுக்கும் வகையில் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளையும் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என்றும் சார் ஆட்சியர் அறிவுறுத்தினார்.

இதுகுறித்து சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின் கூறுகையில், "நோய் தடுப்பு என்பது நமது வீடுகளிலிருந்தும், நமது சுற்றுப்புறத்திலிருந்தும் தொடங்குகிறது. பொதுமக்களின் ஒத்துழைப்புடன் நிர்வாகத்தின் சார்பில் தொடர்ந்து தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். செய்யாறு பகுதியை தூய்மையாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க ஒவ்வொரு குடும்பத்தின் ஒத்துழைப்பும் மிகவும் அவசியம்" என்றார்.

செய்யாறு சார் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து பொதுமக்களும் தங்களது வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களைத் தூய்மையாகப் பராமரித்து, தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொண்டு, தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுக்கும் பணிகளில் நிர்வாகத்துடன் இணைந்து தீவிரமாகப் பங்கேற்க வேண்டும் என சார் ஆட்சியர் கேட்டுக்கொண்டார்.

தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., மாவட்டஆட்சியர்அலுவலகவளாகத்தில்மாற்றுத்திறனாளிகள்நலத்துறைசார்பில் சர்வதேசசைகைமொழிகள்தினத்தையொட்டிபொதுமக்களிடையேவிழிப்புணர்வு ஏற்படுத்துவதன் நோக்கமாக மாற்றுத்திறனாளிகளை ஒருங்கிணைத்து விழிப்புணர்வுபேரணியினைகொடியசைத்துதொடங்கிவைத்தார். உடன்மாவட்ட மாற்றுத்திறனாளிகள்நலஅலுவலர்திருமதி.செந்தில்குமாரிமற்றும்பலர்உள்ளனர்.

# பி.ஜி.எம்.எல். தொழிலாளர்களின் குடும்பங்கள் என்ன அகதிகளா?

# 21 வீடுகள் இடிப்பு... கண்ணீரில் குடும்பங்கள்; நியாயம் கேட்டு அன்பரசன் ஆவேசம்

கே.ஜி.எஃப்,செப்.24

பல ஆண்டுகளாக தங்கவயல் மண்ணில் வாழ்ந்து வந்த பி.ஜி.எம்.எல். தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலை, மிகப்பெரிய வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

ரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிகளுக்காக, கே.ஜி.எஃப் NT பிளாக் பகுதியில் உள்ள 21 வீடுகள் இடிக்கப்பட்டுள்ளன. வளர்ச்சிப் பணிகள் நடைபெற வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால், அந்த வளர்ச்சிக்காக தங்களது வீடுகளை இழக்கும் குடும்பங்களின் நிலை என்ன? அவர்களின் எதிர்காலம் என்ன? அவர்களுக்கு உரிய நியாயம் கிடைக்குமா? என்பதுதான் தற்போது எழுந்துள்ள முக்கியமான கேள்வி.

பல ஆண்டுகளாக பி.ஜி.எம்.எல். சுரங்க நிறுவனத்தில் பணியாற்றிய தொழிலாளர்களின் குடும்பங்கள், இந்த மண்ணோடு பின்னிப் பிணைந்த வாழ்க்கையை வாழ்ந்து வந்துள்ளனர். வேலை செய்த காலத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களித்த அந்த தொழிலாளர்களின் குடும்பங்கள், இன்று தங்களது சொந்தவீடுகளையேஇழந்துநிற்கும்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

"பி.ஜி.எம்.எல். தொழிலாளர்களின் குடும்பங்கள் என்ன அகதிகளா?"

என்ற கேள்வியை அன்பரசன் ஆவேசமாக எழுப்பியுள்ளார்.

வீடு என்பது வெறும் நான்கு சுவர்கள் அல்ல. ஒரு குடும்பத்தின் பல ஆண்டுகால நினைவுகள், குழந்தைகளின் வளர்ச்சி, பெற்றோரின் உழைப்பு என ஒரு தலைமுறையின் வாழ்க்கை அதற்குள் அடங்கியிருக்கிறது.

அப்படிப்பட்ட வீடுகள் ஒரே நாளில் இடிக்கப்படும்போது, அந்த குடும்பங்களின் மன நிலை எப்படி இருக்கும்?

வீட்டை இழந்தவர்கள் தற்போது எங்கு செல்வார்கள்?குழந்தைக ளின் கல்வி எப்படி தொடரும்?முதியவர்கள் எங்கே தங்குவார்கள்?மாற்று குடியிருப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?உரிய இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா?மறுவாழ்வுக்கான உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?என்ற கேள்விகள் அனைத்தும் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளன.

இதுகுறித்து அன்பரசன் கடும் எதிர்ப்பை பதிவு செய்துள்ளார். 21 குடும்பங்களின் வீடு



கள் இடிக்கப்பட்ட நிலையில், அவர்களின் கண்ணீரை அதிகாரிகள் அலட்சியப்படுத்தக் கூடாது என்றும், பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் உரிய நியாயம் கிடைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

"இந்த கண்ணீர்த் துளிகள் சும்மா விடுமா?" என்ற கேள்வியையும் அவர் எழுப்பியுள்ளார்.

ரயில்வே மேம்பாலம் என்பது நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட ஒரு வளர்ச்சித் திட்டம். போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், பொதுமக்களுக்கு வசதியை ஏற்படுத்தவும் இந்தத் திட்டம் முக்கியமானதாக இருக்கலாம்.

ஆனால், வளர்ச்சி என்ற பெயரில் மக்கள் தங்களது வாழ்வாதாரத்தையும் குடியிருப்பையும் இழக்க வேண்டிய சூழல் ஏற்பட்டால், அந்த மக்களின் மறுவாழ்வு குறித்த கேள்விக்கும் பதில் இருக்க வேண்டும் என்பதே அன்பரசன் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கையாக உள்ளது.

பலஆண்டுகளாகஅரசுமற்றும்நிர்வாகத்தின் கவனத்தைஎதிர்பார்த்துவாழ்ந்தகுடும்பங்கள், தற்போது வீடுகளையும் இழந்துவிட்டதாக கூறுகின்றனர்.

ஒருபுறம் மேம்பாலப் பணிகள் வேகமாக நடைபெறுகின்றன.

மறுபுறம், "நாங்கள் எங்கே செல்வது?" என்ற கேள்வியுடன் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கண்ணீருடன் நிற்கின்றனர்.

இதனால், அதிகாரிகள் உடனடியாக பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நிலையை நேரில் ஆய்வு செய்து, அவர்களுக்கு வழங்க வேண்டிய இழப்பீடு, மாற்று குடியிருப்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் குறித்து தெளிவான பதிலை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

21 வீடுகள் இடிக்கப்பட்டது ஒரு கட்டுமானப் பணியின் ஒரு பகுதியாக மட்டும் பார்க்கப்படக்கூடாது. அந்த 21 வீடுகளுக்குள் வாழ்ந்த குடும்பங்களின் வாழ்க்கையும், அவர்களின் எதிர்காலமும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

"எங்களது வீடுகளை இழந்தோம்... குறைந்தபட்சம் எங்களது உரிமைகளையாவது இழக்கக் கூடாது" என்ற மனநிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் இருப்பதாக அப்பகுதியில் இருந்து குரல்கள் எழுகின்றன.

எனவே, ரயில்வே மேம்பாலப் பணிகள் தடையின்றி நடைபெறுவதுடன், வீடுகளை இழந்த 21 குடும்பங்களுக்கும் உரிய நியாயம் கிடைக்க வேண்டும்; அவர்களின் மறுவாழ்வு உறுதி செய்யப்பட வேண்டும் என்பதே தற்போது முன்வைக்கப்படும் முக்கிய கோரிக்கையாக உள்ளது.

பி.ஜி.எம்.எல். தொழிலாளர்களின் உழைப்பால் வளர்ந்த இந்த மண்ணில், அவர்களின் குடும்பங்கள் இன்று வீடிழந்து நிற்க வேண்டிய நிலை ஏற்படக்கூடாது.

அவர்களின் கண்ணீருக்கு தீர்வு கிடைக்குமா?

21 குடும்பங்களுக்கு நியாயம் கிடைக்குமா?

என்பதற்கான பதிலை அதிகாரிகளும், சம்பந்தப்பட்ட நிர்வாகமும் வழங்க வேண்டிய நேரம் இது.

## பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்

# திருவள்ளூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்,தமிழ்நாடு மின்னணுவியல் கழக நிர்வாக இயக்குநர் கே.பி.கார்த்திகேயன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கவிதா ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சரின் காணொலியை நேரலையில் பார்வையிட்டு, மாணவியர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினர்

தமிழ்நாடுமுதலமைச்சர் ச.ஜோசப் விஜய் சமூக நலன்(ம) மகளிர்உரிமைத் துறை சார்பில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்" சென்னையில் தொடங்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி நகராட்சி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் திருவள்ளூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/தமிழ்நாடு மின்னணுவியல் கழக நிர்வாக இயக்குநர் முனைவர் கே.பி.கார்த்திகேயன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கவிதா ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சரின் காணொலியை நேரலையில் பார்வையிட்டு, மாணவியர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினர். இந்நிகழ்வில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.பிரகாசம், திருவள்ளூர் சார் ஆட்சியர் மரு.எஸ்.பிரசாந்த், மாவட்ட ஊரக





வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் (பொ) கவிதா, பூவிருந்தவல்லி நகர்மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன், பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையர் சரவணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) ஜோதி, செயற்பொறியாளர் (ஊ.வ) ராமசாமி, தலைமையாசிரியர், ஆசிரியர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் திரளான மாணவிகள் உடனிருந்தனர்.

## கன்னியாகுமரி மாவட்டத்தில் அச்சன்குளம் பகுதி மருத்துவாழ்மலையில்

# மனோலயா ஒருங்கிணைந்த மனநல காப்பகம் திறப்பு விழா

கன்னியாகுமரி மாவட்டத்தில் அச்சன்குளம் பகுதி மருத்துவாழ்மலையில் மனோலயா ஒருங்கிணைந்த மனநல காப்பகம் திறப்பு விழா நடந்தது. மாவட்ட கலெக்டர் பிரதாப், மாற்றுதிறனாளிகள் நல அலுவலர் தினேஷ் சந்திரன் ஆகியோர் முன்னிலையில் கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி எம்.எல்.ஏ., தளவாய்சுந்தரம் ரிப்பன் வெட்டி புதிய கட்டிடத்தை திறந்து வைத்தார்.

காப்பக உரிமையாளர் மணிகண்டன் அனைவரையும் வரவேற்று பேசினார். இதில் அதிமுக ஒன்றிய





செயலாளர் தாமரை தினேஷ், கவுன்சிலர் விஜயன், அதிமுக நிர்வாகிகள் பேராசிரியர் நீலபெருமாள், தம்பி தங்கம், தங்கவேல், ஆடிட்டர் சந்திரசேகர், சிவபாலன், எழிலன், ராஜன், பாலன், ரெகு உட்பட பலர் பங்கேற்றனர்.



**பழனியில், குளத்து ரோடு திருஆவினன்குடி அருகே, பாலத்தின் சென்டரில் வைக்கப்பட்டுள்ள சென்டர் மீடியாவில், வாகனம் மோதி பழுதடைந்துள்ளது. மேலும் பாலத்தின் இருபுறமும் போட்டுள்ள இரும்பு பட்டாக்கள் துருப்பிடித்து, அருவருக்கத்தக்க நிலையில் உள்ளது. எனவே இதை விரைவில் சரி செய்ய வேண்டுமென, வாகன ஓட்டுனர்களும், அந்த வழியாக செல்வோரும் கோரிக்கை**

## தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மக்கள் குறைதீர்க்கும் கூட்டரங்கில்

# மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன் தலைமையில் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம்

மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப, அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

தேனி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் 29.09.2026 அன்று காலை 10 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மக்கள் குறைதீர்க்கும் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.



இக்கூட்டத்தில் மனு அளிக்க விரும்பும் மாற்றுத்திறனாளிகள் தங்களது மாற்றுத்திறனாளி அடையாள அட்டை நகல், UDID அட்டை நகல், குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல் ஆகிய ஆவணங்களுடன் நேரிலோ அல்லது பாதுகாவலர்மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.எனவே, மாற்றுத்திறனாளிகளுக்கான இச்சிறப்பு குறைதீர்க்கும் நாள்கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் தங்கள் கோரிக்கை தொடர்பான மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA